# அறிவுரைக் கையேடு

# தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர்படை உறுப்பினர் தேர்வு 2013-2014

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர்படை உறுப்பினர் பதவிக்கு தேர்வுபெற தமிழ்நாட்டில் வசிக்கும் ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. வயது : O.C. - 18 முதல் 25 வயது வரை (01.01.1988 முதல் 01.01.1995). B.C (or) BC(Muslim) (or) MBC/DNC - 18 முதல் 27 வயது வரை (01.01.1986 முதல் 01.01.1995). SC/SC (அருந்ததியர்)/ST - 18 முதல் 30 வயது வரை (01.01.1983 முதல் 01.01.1995). 01.01.2013 அன்று வயது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

2. கல்வித் தகுதி : இந்த அறிக்கை வெளிவரும் தேதியில் பத்தாம் வகுப்பு/எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. பதவிகளின் மொத்த எண்ணிக்கை: 10,500 (ஆண்கள்)

4. வகுப்புவாரி ஒதுக்கீடு : **OC – 31%, BC-26.5%, BC(Muslim)-3.5%, MBC/DNC-20%, SC-15%, SC** (அருந்ததியர்)**-3%, ST-1%** வழங்கப்படும். ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கான 3% இடங்கள் முன்னுரிமையில் நிரப்பப்பட்ட பின்னர் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் மிகுதியாக இருந்தால் அவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான ஒதுக்கீட்டின் கீழும் தேர்வு செய்யப்படுவார்கள். ஆதிதிராவிடர் (அருந்ததியர்) இட ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படத் தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் அப்பதவியிடங்கள் பிற ஆதிதிராவிடர் வகுப்பினரைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

5. பிற ஒதுக்கீடுகள் : இத்தேர்வில் பணி நியமனம் பெறுவதற்கு, முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பிறருக்கான சிறப்பு ஒதுக்கீடுகள் ஏதும் இல்லை.

6. விண்ணப்பதாரர்கள் எந்த மாவட்டத்தில் அல்லது மாநகரத்தில் தேர்வு செய்ய விரும்புகிறார்களோ அந்த மாவட்டம் அல்லது மாநகரை விண்ணப்பத்தின் பத்தி 1ல் குறிப்பிட வேண்டும். விரும்பிய மாவட்டம் அல்லது மாநகரத்திற்கு மட்டுமே தேர்வு செய்யப்படுவார்கள். இவ்விருப்பத்தை பிறகு மாற்ற முடியாது.

7. மாவட்டம்/மாநகரம் வாரியான இனவாரி பதவியிட எண்ணிக்கை :

| வ. எண் | மாவட்டம்/ மாநகரம் | மொத்த பதவியிடம் | பொது | பி.வ | பி.வ (இஸ்லாமியர்) | மி.பி.வ/ சீ.ம | ஆ.தி | ஆ.தி (அருந்ததியர்) | ப.கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | சென்னை காவல் | 2835 | 879 | 751 | 99 | 567 | 425 | 86 | 28 |
| 02 | காஞ்சிபுரம் | 280 | 86 | 74 | 10 | 56 | 42 | 9 | 3 |
| 03 | திருவள்ளூர் | 150 | 46 | 40 | 5 | 30 | 22 | 5 | 2 |
| 04 | விழுப்புரம் | 220 | 67 | 59 | 8 | 44 | 33 | 7 | 2 |
| 05 | கடலூர் | 260 | 80 | 69 | 9 | 52 | 39 | 8 | 3 |
| 06 | வேலூர் | 370 | 114 | 98 | 13 | 74 | 55 | 12 | 4 |
| 07 | திருவண்ணாமலை | 290 | 89 | 77 | 10 | 58 | 44 | 9 | 3 |

| வ. எண் | மாவட்டம்/ மாநகரம் | மொத்த பதவியிடம் | பொது | பி.வ | பி.வ (இஸ்லாமியர்) | மி.பி.வ/ சீ.ம | ஆ.தி | ஆ.தி (அருந்ததியர்) | ப.கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08 | கோயம்புத்தூர் மாநகரம் | 110 | 34 | 29 | 4 | 22 | 16 | 4 | 1 |
| 09 | கோயம்புத்தூர் மாவட்டம் | 285 | 88 | 75 | 10 | 57 | 43 | 9 | 3 |
| 10 | ஈரோடு | 180 | 55 | 48 | 6 | 36 | 27 | 6 | 2 |
| 11 | நீலகிரி | 220 | 67 | 59 | 8 | 44 | 33 | 7 | 2 |
| 12 | திருப்பூர் | 250 | 77 | 66 | 9 | 50 | 37 | 8 | 3 |
| 13 | சேலம் மாநகரம் | 110 | 34 | 29 | 4 | 22 | 16 | 4 | 1 |
| 14 | சேலம் மாவட்டம் | 245 | 76 | 64 | 9 | 49 | 37 | 8 | 2 |
| 15 | நாமக்கல் | 135 | 42 | 35 | 5 | 27 | 20 | 5 | 1 |
| 16 | தருமபுரி | 180 | 55 | 48 | 6 | 36 | 27 | 6 | 2 |
| 17 | கிருஷ்ணகிரி | 245 | 76 | 64 | 9 | 49 | 37 | 8 | 2 |
| 18 | திருச்சி மாநகரம் | 165 | 51 | 43 | 6 | 33 | 25 | 5 | 2 |
| 19 | திருச்சி மாவட்டம் | 165 | 51 | 43 | 6 | 33 | 25 | 5 | 2 |
| 20 | கரூர் | 110 | 34 | 29 | 4 | 22 | 16 | 4 | 1 |
| 21 | பெரம்பலூர் | 110 | 34 | 29 | 4 | 22 | 16 | 4 | 1 |
| 22 | அரியலூர் | 110 | 34 | 29 | 4 | 22 | 16 | 4 | 1 |
| 23 | புதுக்கோட்டை | 310 | 96 | 82 | 11 | 62 | 46 | 10 | 3 |
| 24 | தஞ்சாவூர் | 200 | 62 | 53 | 7 | 40 | 30 | 6 | 2 |
| 25 | நாகப்பட்டினம் | 225 | 69 | 60 | 8 | 45 | 34 | 7 | 2 |
| 26 | திருவாரூர் | 150 | 46 | 40 | 5 | 30 | 22 | 5 | 2 |
| 27 | மதுரை மாநகரம் | 110 | 34 | 29 | 4 | 22 | 16 | 4 | 1 |
| 28 | மதுரை மாவட்டம் | 255 | 79 | 67 | 9 | 51 | 38 | 8 | 3 |
| 29 | விருதுநகர் | 320 | 99 | 85 | 11 | 64 | 48 | 10 | 3 |
| 30 | திண்டுக்கல் | 230 | 71 | 61 | 8 | 46 | 35 | 7 | 2 |
| 31 | தேனி | 110 | 34 | 29 | 4 | 22 | 16 | 4 | 1 |
| 32 | இராமநாதபுரம் | 360 | 111 | 95 | 13 | 72 | 54 | 11 | 4 |
| 33 | சிவகங்கை | 185 | 57 | 49 | 6 | 37 | 28 | 6 | 2 |
| 34 | திருநெல்வேலி மாநகரம் | 110 | 34 | 29 | 4 | 22 | 16 | 4 | 1 |
| 35 | திருநெல்வேலி மாவட்டம் | 330 | 102 | 87 | 12 | 66 | 50 | 10 | 3 |
| 36 | தூத்துக்குடி | 330 | 102 | 87 | 12 | 66 | 50 | 10 | 3 |
| 37 | கன்னியாகுமரி | 250 | 77 | 66 | 9 | 50 | 37 | 8 | 3 |

8. மதிப்பூதியம் : மாதாந்திர மதிப்பூதியம் ரூ. 7,500/- (இதரப் படிகள் ஏதுமில்லை).

9. செயற்பாடுகள் மற்றும் பணிகள் : காவல் வாகனங்களை ஓட்டுதல், அலுவலகக் கடிதங்களைப் பட்டுவாடா செய்தல் மற்றும் கணினி விவரப் பதிவுப் பணிகள், காவலர் குடியிருப்புகளைப் பராமரித்தல், விபத்தில் உயிர்ப்பலிகள் ஏற்படாவண்ணம் தடுக்கும் பணியில் காவல் படைக்கு உதவி செய்தல்.

10. அழைப்புக் கடிதம் : கல்வி மற்றும் வயதுத் தகுதியுடையவர்களுக்கு எழுத்துத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் அவர்களது முகவரிக்கு அனுப்பப்படும். தேர்வு தினத்திற்கு முன்னர் அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள், அவர்கள் விண்ணப்பதின் நகலை அவர்கள் விண்ணப்பம் அனுப்பியுள்ள மாவட்டம்/ மாநகர காவல் அலுவலகத்தில் (பத்தி எண் 21-ல் குறிப்பிட்டுள்ள காவல் அலுவலக முகவரியில்) பெற்றுக்கொள்ளலாம்.

11. எழுத்துத் தேர்வு : (i) விடைகளை தெரிவு செய்து எழுதும் வகையிலானது கொள்குறி வகை(**Objective type**). (ii) தேர்வு நேரம் : 1 மணி 40 நிமிடங்கள். (iii) வினாத்தாள் தமிழில் இருக்கும். மொத்த மதிப்பெண்கள் 100. எழுத்துத் தேர்வில் குறைந்த பட்சம் 35 மதிப்பெண்கள் பெறவேண்டும். பாடத்திட்டம் : (i) பத்தாம் வகுப்பு நிலையிலான தமிழ், ஆங்கிலம், கணிதம், பொது அறிவியல், இந்திய வரலாறு, புவியியல், பொருளாதாரம் மற்றும் வணிகம், இந்திய தேசிய இயக்கம். (ii) நடப்பு நிகழ்வுகள். (iii) போக்குவரத்துச் சைகைகள் மற்றும் முதலுதவி. எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களில், அந்தந்த மாநகர/மாவட்ட காலிப் பணியிட எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 1:5 விகிதாச்சாரப்படி இன வாரியாக அடுத்த கட்டத் தேர்வான உடற்கூறு அளத்தல் மற்றும் உடல் தகுதித் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

12. உடற்கூறு அளவு : விண்ணப்பதாரர்களின் உடற்கூறு அளவு கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும். உயரம் : பொது, பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் 170 செ.மீ. இருக்க வேண்டும். ஆதிதிராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்) மற்றும் பழங்குடியினர் 167 செ.மீ இருக்க வேண்டும். மார்பளவு : அனைத்து வகுப்பினருக்கும் : அனைத்து வகுப்பினருக்கும் சாதாரண நிலையில் குறைந்தபட்சம் 81 செ.மீ இருக்க வேண்டும். மூச்சினை முழுமையாக இழுத்த நிலையில் குறைந்தபட்சம் 5 செ.மீ மார்பு விரிவாக்கம் (Expansion) இருக்க வேண்டும்.

13. உடற்தகுதி தேர்வு : உடற்கூறு அளவில் தேரியவர்கள் கீழ்க்கண்ட உடற்தகுதி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். (1) 1500 மீட்டர் ஓட்டத்தினை 7 (ஏழு) நிமிடம் அல்லது அதற்குக் குறைவான நிமிடத்தில் ஓடி முடிக்கவேண்டும். (2) உயரம் தாண்டுதல்-1.20 மீட்டர் (அல்லது) நீளம் தாண்டுதல்-3.80 மீட்டர் (3) 100 மீட்டர் ஓட்டம் - 15 வினாடிகள் அல்லது அதற்குக் குறைவான வினாடிகளுக்குள் ஓடி முடிக்கவேண்டும் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம்-80 வினாடிகள் அல்லது அதற்குக் குறைவான வினாடிகளுக்குள் ஓடி முடிக்கவேண்டும். (4) கயிறு ஏறுதல் - 5 மீட்டர் ஏறுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட 4 நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு தகுதிபெற வேண்டும். ஏதேனும் ஒரு நிகழ்வில் தகுதியிழந்தால் மீதமுள்ள நிகழ்வுகளில் கலந்துகொள்ள தகுதியற்றவராவார். இந்த 4 நிகழ்வுகளும் தகுதிச் சுற்றுத் தேர்வுகளே. மதிப்பெண் வழங்கப்படமாட்டாது. இந்நிகழ்வுகளில் உயரம் தாண்டுதல் / நீளம் தாண்டுதல் நிகழ்வுக்கு மட்டும் இரண்டு வாய்ப்புகள் கொடுக்கப்படும். இரண்டு வாய்ப்புகளில் விண்ணப்பதாரர் பெறும் உயர் அளவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். 100 மீட்டர் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம் மற்றும் கயிறு ஏறுதல் நிகழ்வுகளுக்கு ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே கொடுக்கப்படும். கயிறு ஏறும் போது கைகளைத் தவிர கால்களையோ அல்லது மற்ற எந்த உடல் பாகங்களையோ பயன்படுத்தக் கூடாது.

14. அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் : உடல் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் நடத்தப்படும். விண்ணப்பத்துடன் அனுப்பிய சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் அசல் சான்றிதழ்கள் அனைத்தையும் தேர்வு மையத்திற்கு சரிபார்ப்பதற்காகக் கொண்டு வரவேண்டும். உடற்கூறு அளத்தல், உடற்தகுதித்தேர்வு மற்றும் சான்றிதழ்கள் சரிபார்த்தல் வரை பெறும் தகுதிகள் தற்காலிகமானது.

15. பணிபுரியும் வயது வரம்பு : இப்பணிக்குத் தேர்வு செய்யப்படுபவர் 40 வயது வரை இப்படையில் பணிபுரியலாம்.

16. காவல் துறைக்குத் தேர்வு செய்தல் : இப்பணிக்கான அனைத்துப் பயிற்சிகளிலும் முழுமையாகத் தேர்ச்சியடைந்து, ஒரு வருட காலம் முழுமையாக இப்படையில் பணிபுரிபவர்கள், காவலர் தேர்வுக்கான தகுதிகளிருப்பின் தமிழ்நாடு காவல் துறைப் பணிக்குத் தேர்வு செய்யப்படுவதற்காக தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் நடத்தப்படும் சிறப்புப் பொதுத் தேர்வில் கலந்து கொள்ளத் தகுதி உள்ளவர்கள் ஆவார்கள்.

17. தேர்வுக் கட்டணம் : ரூ.100/- இத்தேர்வுக்கு செலுத்தும் தேர்வுக்கட்டணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

18. விண்ணப்பம் கிடைக்குமிடம் : ரூ. 100/- க்கான தேர்வுக் கட்டணத்தை பத்தி 21-ல் குறிப்பிட்டுள்ள அலுவலக முகவரியில் செலுத்தி விண்ணப்பம் மற்றும் அறிவுரைகள் அடங்கிய கையேட்டினை 02.09.2013 காலை 10.00 மணி முதல் 30.09.2013 மாலை 5.45 மணிக்குள் அனைத்து வேலை நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு நேரடியாக விண்ணப்பத்தினை பெற இயலாதவர்கள் www.tnusrb.tn.gov.in அல்லது www.tnpolice.gov.in என்ற இணையதளங்களில் விண்ணப்பம் மற்றும் அறிவுரைகள் அடங்கிய கையேட்டினை பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். இவர்கள் விண்ணப்பம் அனுப்பும் பொழுது தேர்வு கட்டணம் ரூ.100/-க்கான வங்கி வரைவோலையினை அவர்கள் விண்ணப்பிக்க விரும்பும் மாவட்டம் அல்லது மாநகரத்திற்குரிய பத்தி எண் 21-ல் முகவரியில் குறிப்பிட்டுள்ள பதவியின் பெயரில் எடுத்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

19. தகுதியற்ற விண்ணப்பம் நிராகரிப்பு : உரிய வயதுத் தகுதி மற்றும் கல்வித் தகுதி இல்லாத விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள். மேலும் சரியாகப் பூர்த்தி செய்யப்படாத, புகைப்படம் ஒட்டப்படாத, கையொப்பமிடாத, சரியான முகவரியிடப்படாத, குறைந்த தேர்வு கட்டணம் செலுத்தியுள்ள, தேர்வு கட்டணம் ரூ.100/-க்கான வங்கி வரைவோலை இணைக்காத இணையதள விண்ணப்பம் மற்றும் தவறான முகவரிக்கு எடுக்கப்பட்ட வங்கி வரைவோலை உள்ள விண்ணப்பம், தவறான முகவரிக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பம் போன்ற தகுதியற்ற விண்ணப்பங்கள் ஆரம்ப நிலையிலேயே யாதொரு அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். எனவே விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தினை அனுப்புவதற்கு முன்னர் இவ்விவரங்களை சரிபார்த்துக்கொள்ள வேண்டும். இத்தேர்வுக்கு செலுத்தும் தேர்வுக் கட்டணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

20. விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி : பூர்த்தி செய்த விண்ணப்பம் மற்றும் இணைப்புகளை பத்தி 21ல் குறிப்பிட்டுள்ள பொருத்தமான அலுவலக முகவரிக்கு 01.10.2013 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கலாம். அஞ்சல் முறையில் ஏற்படும் காலதாமதத்திற்கு இவ்வலுவலகம் பொறுப்பேற்காது. நிர்ணயிக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

21. விண்ணப்பம் கிடைக்கும் முகவரி மற்றும் பூர்த்தி செய்த விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

01. சென்னை காவல் - காவல் துணை ஆணையாளர் ( நிர்வாகம்), சென்னை பெருநகர காவல் அலுவலகம், எழும்பூர்,சென்னை-600008. 02. காஞ்சிபுரம் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், காஞ்சிபுரம்-631501. 03. திருவள்ளூர் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகம், திருத்தணி சாலை, திருவள்ளூர்-602001. 04. விழுப்புரம் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகம், விழுப்புரம்-605602. 05. கடலூர் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கடலூர்-607001. 06. வேலூர் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்-632009. 07. திருவண்ணாமலை- காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், திருவண்ணாமலை-606604.
08. கோயம்புத்தூர் மாநகரம்- காவல் துணை ஆணையாளர் (தலைமையிடம்), மாநகர காவல் அலுவலகம், கோயம்புத்தூா-641018. 09. கோயம்புத்தூர் மாவட்டம்- காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கோயம்புத்தூர்-641018. 10. ஈரோடு- காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், காந்தி சாலை, ஈரோடு-688001.
11. நீலகிரி - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், நீலகிரி மாவட்டம், நீலகிரி-643001. 12. திருப்பூர் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், அங்கேரிய பாளையம் சாலை, திருப்பூர்-641602. 13. சேலம் மாநகரம்-காவல் துணை ஆணையாளர் (குற்றம் மற்றும் போக்குவரத்து), மாநகர காவல் அலுவலகம், லைன் மேடு,சேலம் மாநகரம்-636006. 14. சேலம் மாவட்டம் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், நெத்திமேடு, சேலம்-636002. 15. நாமக்கல் -காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், தும்மங்குறிச்சி, நாமக்கல்-637003. 16. தருமபுரி -காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், தருமபுரி-636705.
17. கிருஷ்ணகிரி -காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கிருஷ்ணகிரி-635115. 18. திருச்சி மாநகரம் - காவல் துணை ஆணையாளர் (குற்றம் மற்றும் போக்குவரத்து), மாநகர காவல் அலுவலகம், சுப்பிரமணியபுரம், திருச்சி-620020. 19.திருச்சி மாவட்டம் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், சுப்பிரமணியபுரம், திருச்சி-620020. 20. கரூர்-காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கரூர் மாவட்ட ஆட்சியரக வளாகம், கரூர்-639007. 21. பெரம்பலூர் -காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், பெரம்பலூர்-621212. 22. அரியலூர் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், பல்நோக்குவளாகம், அரியலூர்-621704. 23. புதுக்கோட்டை - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், திருமயம் சாலை, புதுக்கோட்டை-622001. 24. தஞ்சாவூர் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், நீதிமன்ற சாலை,தஞ்சாவூர்-631001. 25. நாகப்பட்டினம் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், வெள்ளிப் பாளையம், நாகப்பட்டினம்-611001. 26. திருவாரூர் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், பெருந்திட்ட வளாகம்,திருவாரூர்-610001. 27. மதுரை மாநகரம்-காவல்துணை

ஆணையாளர் (தலைமையிடம்), மாநகர காவல் அலுவலகம், தெற்கு காவல் கூட தெரு, மதுரை-625001. 28. மதுரை மாவட்டம் -காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், அழகர் கோவில் சாலை, சர்வேயர் காலனி, கே,புதூர், மதுரை-625007. 29. விருதுநகர்-காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், விருதுநகர்-626002. 30. திண்டுக்கல் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், திண்டுக்கல்-624004. 31. தேனி-காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், தேனி-625531. 32. இராமநாதபுரம் -காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், இராமநாதபுரம்-625503. 33. சிவகங்கை-காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகம், சிவகங்கை-630561. 34. திருநெல்வேலி மாநகரம் - காவல்துணைஆணையாளர் (குற்றம் மற்றும் போக்குவரத்து), மாநகர காவல் அலுவலகம், திருநெல்வேலி-627002. 35. திருநெல்வேலி மாவட்டம் - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், திருநெல்வேலி-627002. 36. தூத்துக்குடி-காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கோரம்பள்ளம், தூத்துக்குடி-628101. 37. கன்னியாகுமரி - காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்-629001.

22. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நகல் (Photocopy) ஒன்றினை வைத்துக்கொள்ள மனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

23. மருத்துவப் பரிசோதனை மற்றும் காவல் விசாரணை : விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெறும் அதிகபட்ச மதிப்பெண் மற்றும் உடல் தகுதித் தேர்வுகளில் அடையும் தேர்ச்சியின் அடிப்படையில், நடைமுறையிலுள்ள அரசு விதிமுறைகளின்படி, வகுப்புவாரி ஒதுக்கீட்டின் அடிப்படையில், அந்த மாவட்ட/மாநகர மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். பின்னர் இவர்கள் மருத்துவப் பரிசோதனை மற்றும் குணநலன்கள், முந்தைய நடத்தைகள் சார்ந்த விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

24. முக்கியத் தேதிகள் :

| | | |
|---|---|---|
| i) | அறிவிக்கை நாள் | 02.09.2013 |
| ii) | விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 01.10.2013 மாலை 5.45 மணி வரை |
| iii) | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | 10.11.2013 |